இதிலே ஆர்வம் என்று காட்டுகிறவர்கள் மிகச் சில ராகத்தான் இருப்பார்கள். எனவே அவர்களைப் பொறுத்து தனித்தனியாகத்தான் ஆய்வு செய்ய முடியும்,

சிறைக் கைதிகளுக்குத் தொலைக்காட்சி வசதி.

* 4054—திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சிறைக் கைதிகளுக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகளின் மன மகிழ்விற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும், தொலைக்காட்சி பெட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது சென்னை மத்தியச் சிறையில் 24 தொலைக் காட்சிப் பெட்டிகளும், மதுரை மத்திய சிறையில் 4 தொலைக் காட்சிப் பெட்டிகளும், திருச்சி மத்திய சிறை, மதுரை பெண்கள் தனிச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் தலா ஒரு தொலைக்காட்சி பெட்டியும் அமைக்கப் பட்டு இருக்கின்றன. இதர மத்திய சிறைகளிலும் சிறைவாசி களின் தேனீர் விடுதி மூலம் கிடைக்கும் இலாபத் தொகை யிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. சிறைவாசிகளின் பயன் கருதித் தொண்டு நிறுவனங்கள் அன்பளிப்பாக அளிக்கின்ற தொலைக் காட்சிப் பெட்டிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குற்றஞ்சாட்டப்பட்டு இருக்கின்ற கைதிகள் உள்ள சிறை களிலும் அதனை விரிவுபடுத்த முடியுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது அது போன்ற யோசனை இல்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிறையிலும் தொலைக்காட்சிப் பெட் டிகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் திருச்சி சப்ஜெயிலில் 6 நாட்களாக அடைக்கப்பட்டு இருந்தோம். அப்போது அங்கு அந்தப் பெட்டிகள் இருந்திருந் தால் காட்டியிருப்பார்களே. திருச்சியில் பெண்கள் பகுதியில் அது இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கான ஏற்பாடு செய்வதற்கு வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 19]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் பெயரே தொலைக்காட்சி; எனவே அது தொலைவில் இருந்து இருக்கும்; அம்மையார் பார்த்திருக்க நேரம் இல்லை. (சிரிப்பு).

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சிறைச்சாலைகளில் தொலைக்காட்சி வசதி கைதிகளுக்குச் செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். கைதிகள் லாக்—அப்புக்குப் போகும் முன்பு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே அந்தத் தொலைக்காட்சியைப் பார்க்கக் கூடிய வகையில் அது ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா? அல்லது எல்லா நேரங்களிலும் அதாவது எந்த நேரத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடங்குகிறதோ அந்த நேரம் முதல் அது முடிவுறும் காலம் வரை—கைதிகள் பார்க்கக்கூடிய அளவுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படிச் செய்வதற்கு சிறை விதிகளிலே இடம் இல்லை என்றாலும்கூட இதுவரை காட்டிக் கொண்டிருந்த திரைப்படங்கள் மற்றவற்றைக் காட்டுவதற்கு ஏற்ற வசதிகளையாவது அரசு செய்து தருமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

(9-15 மணி)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே. அரசினுடைய நிதியாதாரம் எல்லையற்றுப் பெருகுமேயானால், ஒவ்வொரு கொட்டடியிலும் கூட ஒரு டி.வி. பெட்டி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். திரைப்படத்தைப் பற்றிச் சொன்னார்கள். திரைப்படங்கள் அநேகமாக எல்லாச் சிறைகளிலும் இப்போது போட்டுக்காட்டப்பட்டு வருகின்றன. வாரம் ஒரு முறையோ அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறையோ அப்படிப்பட்ட படங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகளில் கடலூர் மத்திய சிறையும் பழமையானவைகளில் ஒன்று. அங்கே தொலைக்காட்சிப் பெட்டிகளைக்கூட வைப்பதற்கு இடமில்லாத நிலையில் அங்குள்ள பல்வேறு பிளாக்குகள் பூராவும் இடிந்து விழுந்து இருக்கின்றன. கிரிமினல் கைதிகள் மட்டுமல்லாமல், பல கால கட்டங்களில் அரசியல் கைதிகளும் ஏராளமான அளவில் அங்கே அடைக்கப்படக் கூடிய காரணத்தால் அந்தக் கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்கும், கட்டுவதற்குமான ஏற்பாடுகளை அரசு செய்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தொலைக்காட்சி வசதியைப் பற்றி இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து கவனத்திலே கொள்ளப்படும்.

திரு. கே. ரமணி: தலைவரவர்களே, கோவை மத்திய சிறையில் ஒரு பெரிய மில்லே வேலை செய்து, 50ப், 600 கைதிகள் அதிலேயிருந்து பணமும் அரசாங்கத்திற்குச் சம்பாதித்துக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாக் கொட்டடிகளின் முன்னாலேயும் பெட்டி வைத்துக் காட்டுவது என்பது எவராலும் சாத்தியம் அல்ல. அவர்கள் அத்தனை பேர்களையும் வாரத்தில் ஒரு நாளாவது அல்லது இரண்டு தடவை அரை மணி நேரமோ ஒரு மணி நேரமோ டயம் நிர்ணயித்து—பெரிய தியேட்டர் இருக்கின்றது அந்தச் சிறைக்குள்ளேயே—அதிலேயாவது அவர்களுக்கு அந்தத் தொலைக் காட்சியைக் காட்டுவதற்கு, அத்தனை பேரும் ஒரேயிடத்திலே இருந்து பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஏற்கனவே அந்த சினிமாக் கொட்டகையிலே சினிமாப் படம் போட்டுக் காட்டப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, தொலைக்காட்சி இருக்க வேண்டுமென்று. கோவை மத்திய சிறையிலே தொலைக்காட்சிப் பெட்டி வைப்பது அவசியம் தான். கோவையிலே இருக்கின்ற தொண்டு நிறுவனங்கள் முன் வந்து ஒரு தொலைக் காட்சிப் பெட்டியைக் கொடுக்குமேயானால் அதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்களேயானால், அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கின்ற தொலைக்காட்சிப் பெட்டி வசதி பெற்று இருக்கின்ற மத்திய சிறைச்சாலைகளிலே 6 மணி அளவிலே லாக்கப்பிலே சென்று விடுவார்கள். லாக்கப்பினுடைய நேரத்தை மாற்றினால்தான் தொலைக் காட்சி பார்ப்பதாலே பலனை அடைய முடியும். ஆகவே, அரசாங்கம் எங்கெங்கெல்லாம் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த மத்திய சிறைச்சாலைகளில் இந்த லாக்கப் நேரத்தை மாற்றியமைக்க ஏதாவது உத்தரவிடுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, லாக்கப்பினுடைய நேரத்தை மாற்ற முடியாது. தொலைக்காட்சி நேரத்தை வேண்டுமானால் மாற்றலாம். அதைக் கருதித்தான் லாக்கப் நேரத்தை மாற்ற முடியாது. அது ஐந்தரை மணி ஆறு மணிக்கு அடைக்கப்படும். அந்த இடைக்காலத்திலே பார்த்துக் கொள்ள முடியுமே தவிர, வேறு நேரத்தில் பார்க்க முடியாது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: பேரவைத் தலைவரவர்களே, சிறைகளிலே ஆயுள் தண்டனைக் கைதிகள் சிலர் திருந்தியவர்களாக இருக்கிறார்கள். சிலர் கொலை, கொள்ளை. கற்பழிப்பு போன்ற

கடுமையான குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களைக் கடுமையாகத் தண்டித்து, திருந்தியவர்களுக்காக பஞ்சாப், கேரளா போன்ற மாநிலங்களிலே பொது மன்னிப்பு வழங்கி எட்டு ஆண்டு களிலே விட்டிருப்பதைப் போல ஏற்பாடு செய்து தருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா தொடர்பற்றது.

திரு.வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே' தொலைக்காட்சியிலே சில நேரங்களில் திரைப்படமோ அல்லது நாடகமோ காட்டுகின்ற நேரத்திலே கைதியினுடைய மன நிலையைப் பாதிக்கின்ற அளவிலே அல்லது குற்றத்தை ஊக்குவிக் கின்ற அளவிலே படங்கள் வந்தால் அந்தப் படங்கள் கைதி களுக்குக் காட்டப்படாத அளவிலே தடை செய்யப்படுமா? அதைப் போல வீடியோ மூலம் கைதிகளைத் திருத்துகின்ற வழியிலே, நெறிப்படுத்துகின்ற வகையிலே நல்ல தரமான படங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை போட்டுக் காட்ட ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கூடுமான வரையில் சிறையிலே இருந்து தப்புகின்ற நிகழ்ச்சிகள் உள்ள படங்கள் சிறைச்சாலைகளிலே காட்டப்படாமல் இருப்பது நல்லது. கைதிகளை மேலும் தண்டிக்க வேண்டுமென்று விரும்பினால் சில படங்களை அவர்களுக்குப் போட்டுக் காட்டுவதும் நல்லது.(சிரிப்பு

(9—20 மணி)

திருமதி எஸ். பி. சற்குணம்: தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலையில் பெண்களுக்கென்று தனிப்பகுதி இருக் கிறது. அங்கே தனியாக தொலைக்காட்சி வசதி செய்யப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கேள்வியை அடிப்படையாக வைத்து அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

சிவில் நீதிமன்றங்களுக்குக் கோடை விடுமுறை.

* 6039—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவில் நீதிமன்றங்களுக்குக் கோடை விடுமுறை அளிக்கும் வழக்கம் மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே

(அ) இல்லை.